உ

சிவமயம்

அல்வாய் வடக்கு

அருள்மிகு

# குச்சம் ஞானவைரவர்

# திருவூஞ்சல்



வட அல்வை க. சின்னராஜா

11 - 04 - 1998

உ

சிவமயம்

அல்வாய் வடக்கு

அருள்மிகு

# குச்சம் ஞானவைரவர்

# திருவூஞ்சல்

ஆக்கம்

வட அல்வை க சின்னராஜா

வெளியீடு

சித்திரா - சின்னராஜா

''சித்திராலயம்''

அல்வாய் வடக்கு

அல்வாய்

சிவமயம்

## காப்பு

திருவளரும் வடமராட்சிப் பிரிவின் கண்ணே
திகழ்கின்ற குச்சமெனும் பதியில் வாழும்
அருள்வளரும் மெய்ஞான வைரவர் மீதே
அமுதமெனும் செந்தமிழால் ஊஞ்சல் பாட
தெருள்வளரும் பிரணவமாய் வடிவம் கொண்ட
திருமுருகன் உடன் பிறந்த கணபதியே
கருவளரும் பொற்பாதம் கரம் குவித்தேன்
கனிவுடனே எந்தனுக்கு அருள் புரிவாய்.

## நூல்

அறிவான மறைநான்கும் கால்க ளாக
அந்தமெனும் உபநிடதம் விட்ட மாக
நெறியான ஆகமங்கள் சட்ட மாக
நேர்மையெனும் சைவநீதி வடம தாக
செறிவான திருமுறைகள் பீட மாக
செங்கோலாய் நீயேந்தும் சூல மாக
குறிப்புடனே குச்சமதில் கோயில் கொண்ட
குலதெய்வம் ஞானவைரவரே ஆடீர் ஊஞ்சல்.

விண்ணவரும் விஞ்சையரும் வடம தாட்ட
விக்ன விநாயகன் வடம தாட்ட
கண்ணனொடு ராதைவந்து வடம தாட்ட
கலைஞான வாணிஅயன் வடம தாட்ட
மண்ணவர்கள் புடைசூழ்ந்து வாழ்த்துப் பாட
மாதுமை பாகனொடும் வடம தாட்ட
எண்ணரிய வரம்தரவே குச்சம் மேவும்
எங்களிறை ஞானவைரவரே ஆடீர் ஊஞ்சல்.

நீலமணிப் பட்டுடனே சூலந் தாங்கி
நித்திலமும் ரத்தினமும் தங்க நகையும்
கோலவணி கலன்யாவும் கவினாய்ப் பூட்டி
கொழுந்தெரியும் நிறமுடைய சடையும் கொண்டு
ஆலரசு பனைதென்னை வளங்கள் சூழும்
அல்வையூர் புகழ்காத்த குச்சம் மேவி
ஞாலமிசை அறமோங்க காவல் செய்யும்
ஞானமுள்ள வைரவரே ஆடீர் ஊஞ்சல்.

மந்திரமோ உந்தனது வடிவம் தீட்ட
மாவலிமை அற்புதங்கள் வீரம் கொட்ட
தந்திரமாம் ஆகமங்கள் கோயில் காட்ட
தமிழ்முருகன் ஒருபுறமாய் அருள் பொழிய
ஐந்துமுகக் கணபதியோ மறுபுறமாய் வீற்றிருக்க
வந்துதனி அழகுடனே கருவறையில் அமர்ந்திருக்க
சிந்தையிலே அருளூட்டி குச்சம் மேவும்
சீர்பெருகும் ஞானவைரவரே ஆடீர் ஊஞ்சல்,

கால்வண்ண வீரம்காட்டும் கழல்கள் ஆட
கவின்வண்ண நீறொளிரும் தோள்கள் ஆட
வேல்வண்ணம் எறிசூலம் கையில் ஆட
விளங்கும் பொன்மாலையும் மார்பில் ஆட
தோல்வண்ணம் ஒலிஎழுந்து உடுக்கில் ஆட
தொண்டரெலாம் மனங்கசிந்து பாட்டுப் பாட
நால்வேதம் தினமொலிக்க குச்சம் வாழும்
ஞானமுள்ளவைரவரே ஆடீர் ஊஞ்சல்

முல்லையொடு மல்லிகையும் மணம் கமழ
முக்கனிகள் தூங்கும் பொழில் குயில்கள்பாட
எல்லையிலாச் சிற்பக்கலை அழகு சொட்ட
எழிலுருவ மணியோசை வானில் முட்ட
நல்லஇனப் பசுக்களெல்லாம் பாலும் சொரிய
நயமுடனே அபிசேகம் நாளும் செய்யும்
அல்வைநகர் குச்சமதில் கோயில் கொண்ட
அருள்ஞான வைரவரே ஆடீர் ஊஞ்சல்.

வேதமெனும் நாயதனை வாகன மாக
விருப்புடனே கொண்டு தினம் காவல்செய்து
ஏதமிகு குணமுடைய பிரம தேவன்
எள்ளி நகையாட தலையைக் கொய்து
மாதவனாம் கண்ணனது உயிரை ஈந்த
முக்கண் உடையதொரு நிர்வாண மூர்த்தியாகி
நாதமிகு இசைமுழங்க குச்சம் மேவும்
நீலநிற ஞானவைரவரே ஆடீர் ஊஞ்சல்

பலநூறு ஆண்டுகளாய் காவல் செய்து
பாங்குடனே பலவரங்கள் எமக்குத் தந்த
உலகமெலாம் உணர்ந்தவனின் திருக் குமரா
உனக்காகப் பெருங்கோயில் நாம் சமைத்தோம்
திலகமென ஈழமதில் திகழ்ந்தே நிற்கும்
திருவுடனே அறிவுடைய அல்வாய் ஊரில்
அலர்கின்ற மலர்ச்சோலை குச்சம் மேவும்
அருள்ஞான வைரவரே ஆடீர் ஊஞ்சல்:

சித்தனே முத்தனே ஆடீர் ஊஞ்சல்
வித்தனே வடுகனே ஆடீர் ஊஞ்சல்
குமரனே கோமனே ஆடீர் ஊஞ்சல்
உன்மத்த உக்கிரனே ஆடீர் ஊஞ்சல்
காலனே கபாலனே ஆடீர் ஊஞ்சல்
சூலனே மழுவனே ஆடீர் ஊஞ்சல்
அலையோசை இசையோசை கேட்கும் குச்சம்
அருள்ஞான வைரவரே ஆடீர் ஊஞ்சல்.

ஊர்முழுதும் காத்திடுவீர் ஆடீர் ஊஞ்சல்
ஊனத்து நோயறுப்பீர் ஆடீர் ஊஞ்சல்
கார்பொழிய அருள்பொழிவீர் ஆடீர் ஊஞ்சல்
கலைவளர ஒளிதருவீர் ஆடீர் ஊஞ்சல்
வேருடனே வினையறுப்பீர் ஆடீர் ஊஞ்சல்
வேண்டும்வரம் தந்திடுவீர் ஆடீர் ஊஞ்சல்
அல்வைபுகழ் குச்சமதில் கோயில் கொண்ட
அருள்ஞான வைரவரே ஆடீர் ஊஞ்சல்.

## வாழ்த்து

அந்தணரும் ஆவினமும் நலமே வாழ்க
அரசுயர அறமோங்க உலகம் வாழ்க
சிந்தையெலாம் சைவநீதி நிறைந்தே வாழ்க
சிறப்பான ஆகமங்கள் வேதம் வாழ்க
சுந்தரமாம் தமிழ்க்கவிதை என்றும் வாழ்க
சிவத்தொண்டர் அடியார்கள் நீடு வாழ்க
இந்திர லோகம்போல் குச்சம் வாழ்க
இறைவன் அருள்ஞான வைரவனார் வாழ்க.



தமிழ்ப்பூக

